மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

29.11.2022 செவ்வாய்க்கிழமை supeedsam.com supeedsam@gmail.com



## ஜப்பான் உலக அழகு ராணி போட்டிக்கு இலங்கை இவன்ஜலின்

**(வி.ரி. சகாதேவராஜா)**

ஜப்பானில் நடைபெற இருக்கும் ஜப்பான் டோக்கியோ சர்வதேச அழகு ராணி போட்டியில் கலந்து கொள்ள இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட இவன்ஜலின் பிரான்சியா லட்சுமணர் ஜப்பான் பயணமானார். லண்டனில் வசிக்கும் தற்போதைய ஐக்கிய இராச்சிய உலக அழகி இவன்ஜலின் இலங்கை அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளியை பூர்வீகமாக கொண்டவர்.

02

## சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு செல்வதை தடை செய்ய விழிப்புணர்வு

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு கடல் வழிப் பயணம் மூலமாக செல்வதை தடை செய்யவும் மக்கள் அதனை நம்பாது செயற்படுவது தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான கலந்துரையாடலொன்று திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் இன்று (29) இடம் பெற்றது.

அவுஸ்திரேலிய நாட்டுக்கான உயர்ஸ்தானிகராலய உயர் பொலிஸ் அதிகாரி ரொபட் வில்சன் மற்றும் திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்க்கு இடையில் இடம் பெற்ற குறித்த சந்திப்பில் அவுஸ்திரேலியாவுக்கு கப்பல் மூலம் செல்வதனால் எந்த பலனும் இல்லை உரிய அரசாங்கம் மூலமாக திருப்பியனுப்பப்படுவர்

02

## மட்டக்களப்பு கல்வி வலயம் மாகாணத்தில் முதலிடம்

**(ரக்ஸனா)**

தற்போது வெளியாகியுள்ள க.பொ.த சாதாரணதர பரீட்சை முடிவுகளின்படி கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு கல்வி வலயம் முதாலாமிடத்தை பெற்றுள்ளதாக மாகாண கல்வி பணிப்பாளர் நகுலேஸ்வரி புள்ளநாயகம் அவர்கள் தெரிவித்தார். வெளியாகிய பொறுபேற்றின் அடிப்படையில் மாகாண கல்வி திணைக்களத்தினால் வலய ரீதியாக மேற்கொள்ளப்பட்ட தரப்படுத்தலின் பிரகாரம் கிழக்கு மாகாணத்தில் உள்ள 17 கல்வி வலயங்களிலும் மட்டக்களப்பு கல்வி வலயம் முதலாமிடத்தினை பெற்றுள்ளது. இதன் அடிப்படையில் அவ்வலயத்தில் மொத்தமாக பரீட்சைக்கு தோற்றிய

02

## சட்டத்தை மதிக்காத அராஜக போக்கு தலைதூக்கியுள்ளது

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ**

சட்டத்தை மதிக்காது அராஜகம் மேலோங்கிய வன்னம் ஈஸ்டர் தாக்குதல் போன்ற சம்பவங்கள் தொடர்பில்சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரொருவர் கொல்லப்பட்டமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர்சஜித் பிரேமதாஸ இன்று (29) பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். சிரந்த அமரசிங்க என்ற சமூக ஊடக செயற்பாட்டாளருக்கு கொலை மிரட்டல் விடுக்கும் காணொளியொன்றுஉள்ளதாகவும், மறுபுறம்,ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவர்வீதியில்

02

## கிழக்கு பாலர் பாடசாலை ஆசிரியர்களின் கொடுப்பனவு அதிகரிக்க வேண்டும்

**இரா.துரைரெட்ணம் வேண்டுகோள்**

கிழக்கு மாகாணசபையின் கல்வி அமைச்சின் கீழ் செயற்படுகின்ற பாலர்பாடசாலை கல்விப் பணியகமானது மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, இவ் மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய 17கல்வி வலயங்களைக் கொண்டு 1681 பாலர் பாடசாலையின் கீழ் 3780 ஆசிரியர்களையும், அண்ணளவாக 50,000 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களையும், உள்ளடக்கி கிழக்கு மாகாண கல்விப் பணியகம் மிகவும் சிறப்பான முறையில் செயற்பட்டு வரும் நிலையில் முன்பள்ளி ஆசிரியர்கள் மிகவும் சிறப்பான சேவையை கடந்த காலங்களில் சேவையாற்றி வந்தது குறிப்பிடத்தக்கதாகும். இப் பணியகத்தின் கீழ் செயற்படுகின்ற ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் தற்சமயம் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம், பொருளாதார வீக்கம் மற்றும் திருமணம் செய்து மூன்று, நான்கு குழந்தைகளுக்கு தாயாகவும் மிகவும் ஏழ்மையுடன் பொருளாதார

02

## மட்டு மேற்கில் அதிகஸ்ட பாடசாலை மாணவன் சாதனை



மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட அதிகஸ்ட பாடசாலையான காஞ்சிரங்குடா காமாட்சி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பு.ரிசாந்தன் என்ற மாணவன் அண்மையில் வெளிவந்த கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் 9பாடங்களிலும் ஏ சித்திகளைப் பெற்று வரலாற்றுச் சாதனையை நிலைநாட்டியுள்ளார். கொல்லநுலை கிராமத்தினை வசிப்பிடமாக கொண்ட குறித்த மாணவன் தரம் 9வரை கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் கல்வி பயின்று பின்னர் காஞ்சிரங்குடா காமாட்சி வித்தியாலயத்தில் கற்கின்றார். கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் கல்வி கற்ற காலத்தில் சமூக விஞ்ஞானப்போட்டியில் பங்கெடுத்து தேசியமட்டத்தில் சாதனை படைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் அதிகஸ்ட பாடசாலையில் கல்வி கற்று இச்சாதனையை நிலைநாட்டியுள்ளமை எடுத்துக்காட்டத்தக்கது.

## 500 வைத்தியர்கள் 8 மாதங்களில் நாட்டை விட்டு வெளியேறினர்

கடந்த 8 மாதங்களில் சுமார் 500 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இன்று (29) பாராளுமன்றத்தில் தெரிவித்தார். சுகாதார நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலை தொடருமானால், நாட்டின் சுகாதார அமைப்பு சீர்குலையும் நிலைமையை எதிர்நோக்கும் அபாயம் இருப்பதாகவும் அவர் கூறினார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே சுகாதார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்




## விதிமுறைகளை மீறி இறக்குமதி செய்யப்பட்ட பால்




சுங்கத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 6 பால் மா கொள்கலன்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி விதிமுறைகளை மீறி ,லங்கைக்கு ,றக்குமதி செய்யப்பட்டுள்ளதாக நிதி ,ராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இன்று (29) பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பால் மா கொள்கலன்கள் தொடர்பான ஆய்வு அறிக்கையொன்றை அவர் இன்று (29) பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

பால் மாவை இறக்குமதி செய்கிறோம் என்ற போர்வையில் இறக்குமதியாளர்கள் மூலப்பொருட்களை இறக்குமதி செய்துள்ளதாக உரிய அறிக்கையில் தெரியவந்துள்ளது. எவ்வாறாயினும், இந்த பிரச்சினை காரணமாக இந்த நாட்டில் பால் மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படாது எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

"கல்விக்கு கைகொடுப்போம்"

எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்

# அறிவாலயம்

அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.

## மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி வெற்றிடம்

**மேற்படி பதவிக்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கல்வி மற்றும் சமூகப்பணி செய்து வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமாக செயற்பட்டுவரும் அறிவாலயம் அறக்கட்டளை நம்பிக்கை நிதியத்திற்கு மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறன.**

### எதிர்பார்க்கப்படும் தகைமைகள்

**அடிப்படை கல்வித் தகமை**

1. சா.த பரீட்சையில் ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி உட்பட ஆறு பாடங்களில் சித்தி
2. உ.தரத்தில் ஆங்கிலம் உட்பட 3 பாடங்களில் சிறப்பு சித்தி

**ஏனைய தகைமைகள்**

1. உளவியல் அல்லது உளசமூக மேம்பாடு அல்லது சமூகவியல் கற்கைகளில் சான்றிதழ் மற்றும் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.
2. ஆங்கிலத்தில் சரளமாக தொடர்பாடலை மேற்கொள்ள கூடியவராக இருத்தல் வேண்டும்.
3. கணனியில் **NVQ** மட்டம் 4 பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் அல்லது கணனித்துறையில் 1 வருடத்திற்கு குறையாத அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
4. பயிற்சி வகுப்புகள் உள்ள தினங்களில் சனி ஞாயிறு விடுமுறை தினங்களிலும் வேலை செய்யக் கூடியவராக இருக்க வேண்டும்
5. வயது 25-35 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
6. மோட்டார் சைக்கிள் அல்லது ஏனைய வாகன அனுமதிப் பத்திரம் இருத்தல் வேண்டும்.
7. மட்டக்களப்பு மாவட்டத்தில் நிரந்தர வதிவிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
8. மாதாந்தம் சகல படிகளுடன் 35000ரூபா சம்பளமாக வழங்கப்படும்.

*தங்களால் சுயமாக தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையினை* ***arivalayam@hotmail.fr*** *என்ற மின்னஞ்சலுக்கு எதிர்வரும் மார்கழி 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.*

**Founder**
**Arivalayam foundation trust**
**Pandariyaveli**
**Kokkaddicholai**
**Batticoloa**
**Srilanka**

## மட்டக்களப்பு கல்வி வலயம் மாகாணத்தில் முதலிடம்

2056 மாணவர்களின் 1789 போர் உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளதுடன் இதனுள் 128 மாணவர்கள் 9ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர். மாறாக குறைந்தளவிலான 7மாணவர்களே எவ்வித பாடத்திலும் சித்தியடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே குறித்த சாதனையை நிலைட்டுவதற்கு அயராது உழைத்த வலயக்கல்வி பணிப்பாளர், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கு பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதாக மாகாண கல்வி பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு செல்வதை தடை செய்ய விழிப்புணர்வு

மக்கள் வதந்திகளை நம்பாதீர்கள் இலட்சக்கணக்கான பணத்தை கொடுத்து ஏமாறாமல் சட்ட விரோதமான முறையில் செல்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும் இதனை மக்கள் மத்தியில் விழிப்புணர்வு செய்வது தொடர்பாகவும் உயர்ஸ்தானிகராலய உயர் பொலிஸ் அதிகாரி தலைமையிலான குழுவினர் இதன் போது பொலிஸ் உயரதிகாரிகளிடத்தில் தெரிவித்துக் கொண்டார்.

குறித்த சந்திப்பில் அவுஸ்திரேலிய நாட்டின் பொலிஸ் உயரதிகாரி,ஊடக அதிகாரி உட்பட திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் என பலர் கலந்து கொண்டனர்

## கிழக்கு பாலர் பாடசாலை ஆசிரியர்களின் கொடுப்பனவு அதிகரிக்க வேண்டும்

கஸ்டத்திற்கு மத்தியில் அடிப்படை தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாமல் வருடக் கணக்காக ஒரு சீருடையை அணிந்து செல்வதும் போக்குவரத்து செய்வதற்கு நிதி இல்லாமல் நடந்து செல்வதும், பொருளாதாரம் இல்லாத நிலையிலும் உறவினர்களிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு சேவையாற்றி வருகின்ற முன்பள்ளி ஆசிரியர்களின் சேவையை எந்த கல்விச் சமூகமும் பாராட்டாமல் இருந்து விட முடியாது.

பாலர்பாடசாலை கல்விப் பணியகத்தினால் வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவுகளை நம்பி காலை 7.30மணி தொடக்கம் மதியம் 12.00 மணிவரையும் சேவை மனப்பாங்குடன் வறுமையின் உச்சத்தில் நின்று பாலகர்களுக்கு வழிகாட்டியாக ஆசிரியர் என்னும் பெயருடன் மன உழைச்சலுடன் இவ் ஆசிரியர்கள் நடமாடுவதோடு, பல ஆயிரக்கணக்கான பட்டதாரிகள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காணர்கள், இலிகிதர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் ஏன் நிருவாகத்துறை சார்ந்த அதிகாரிகள் இன்னும் பல புத்தி ஜீவிகளையும், இன்னும் பல துறைகளைச் சார்ந்தவர்களையும் உருவாக்குவதற்காக நல்லாழுக்கத்தையும், கல்வி வழி காட்டலையும் கற்றுக் கொடுத்த பெருமை இவர்களையே சாரும். இருபத்தைந்து,முப்பது வருடங்களுக்கு மேலாகவும் சேவையாற்றி வரும் இவ் முன் பள்ளி ஆசிரியர்களுக்கு குறிப்பிட்ட வருடங்களாக மாதாமாதம் 4000ஆயிரம் ரூபா கொடுப்பனவுகளை வழங்கி வந்தாலும் பொருட்களின் விலையேற்றத்திற்கு அமைவாக கிழக்கு மாகாண ஆளுநர் அவர்கள் இவ் பணியகத்தின் கீழ் சேவையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஏதோவொரு வகையில் மாதாந்தக் கொடுப்பனவை அதிகரித்துக் கொடுக்க மு.கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஈ.பி.ஆர்.எல்.எப் இரா. துரைரெத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்

## சட்டத்தை மதிக்காத அராஜக போக்கு தலைதூக்கியுள்ளது

கொல்லப்பட்டுள்ளார் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,சமூகம் அச்சத்தில் மூழ்கும் முன் இதுதொடர்பாக சபை முதல்வர் விளக்கம் அளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## ஜப்பான் உலக அழகு ராணி போட்டிக்கு இலங்கை இவன்ஜலின்

இலட்சுமணர் சாந்தி தம்பதியரின் புதல்வியாவார்.

ஐக்கிய ராஜ்யத்தில் உலக அழகு ராணியாக 2021 22 இல் தெரிவாகிய இவன்ஜலின் அதுக்கு முன்பு பெரிய பிரித்தானியாவில் உலக இளம் அழகியாக 2017 18 இல் தெரிவானவர். இவர் ஜப்பானில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 13-ஆம் தேதி நடைபெற இருக்கும் அறுபதாவது உலக அழகி போட்டியில் கலந்து கொள்ள கடந்த திங்களன்று(28) திங்கட்கிழமை லண்டனில் இருந்து ஜப்பான் பயணம் ஆனார் . இந்த ஜப்பான் சர்வதேச உலக அழகி போட்டி எதிர்வரும் டிசம்பர் மாதம் 13-ஆம் தேதி நடைபெற இருக்கின்றது.அதில் எண்பதுக்கும் அதிகமான நாடுகளில் இருந்து அழகிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

உலக அழகு ராணி 2015ல் ஐக்கிய ராஜ்யத்தின் 15 வயது அழகு ராணி போட்டியில் தெரிவாக 2015 லண்டன் அவருது குமாரி போட்டியிலும் தெரிவாகி இருந்தவர். இவர் தற்போது பிரித்தானிய பிரஜை யாக இருந்தபோதிலும் அவருடைய பெற்றோர்கள் இலங்கையை சேர்ந்தவர்கள். இவர் பிரித்தானியாவில் பல தர்மஸ்தாபனங்களை நடத்தி வருகின்றார். அதனூடாக இவர் மட்டக்களப்பு பகுதிகளிலே வீடற்றவர்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுத்ததோடு காலி பகுதியில் பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்கி வைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் தேசிய கட்சிகள் அடையாளப்படுத்திய உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய மூன்று முக்கிய பிரச்சினைகள்

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பொருத்தமான அரசியல் தீர்வைத் தீர்மானிப்பதற்காக கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதலாவது சந்திப்பின் போது, வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் கட்சிகள், காணி அபகரிப்புச் செயற்பாடுகளை நிறுத்துவது உட்பட உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டிய மூன்று பிரதான பிரச்சினைகளை அடையாளம் கண்டுள்ளன. இரு மாகாணங்களிலும் மற்றும் அத்தகைய காணிகள் கூடிய விரைவில் விடுவிக்கப்பட வேண்டும் தற்போதைய அதிகாரப்பகிர்வு தொடர்பான ஏற்பாடுகளை உடனடியாக அமுல்படுத்தி அதன் மூலம் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது மற்றும் ஒரு புதிய அரசியலமைப்பின் மூலம் அதிகபட்ச அதிகாரப் பகிர்வை செயல்படுத்துதல். இது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், கடந்த வெள்ளிக்கிழமை வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் கட்சிகளின் முதல் கட்ட கலந்துரையாடலின் போதே மேற்கண்ட விடயங்கள் அடையாளம் காணப்பட்டதாக குறிப்பிட்டார்.

வடக்கு மற்றும் கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் கட்சிகளுடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடினோம். இது தொடர்பாக ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாடவுள்ளோம். உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய மூன்று முக்கிய பிரச்சினைகளை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். இரண்டு மாகாணங்களிலும் நில அபகரிப்பு நிறுத்தப்பட வேண்டும், அத்தகைய காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும், மாகாண சபைத் தேர்தலை நடத்தி அரசியலமைப்பில் உள்ள அதிகாரப்பகிர்வு தொடர்பான ஏற்பாடுகளை அமுல்படுத்த வேண்டும், புதிய அரசியலமைப்பின் ஊடாக அதிகபட்ச அதிகாரப்பகிர்வு வழங்கப்பட வேண்டும். எனவும் தெரிவித்தார்.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி

இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25096 | வே | 1984**
சாவகச்சேரி | இந்து | BDS
MD | Doctor(Dentist)
ரேவதி (மீனம்) | USA
182 செ.மீ

**21276 | வே | 1993**
புத்தூர் | இந்து | B.Eng
Engineer
பூராடம் (தனுசு)
172 செ.மீ | செவ்: 02

**23671 | வே | 1991**
குரும்பசிட்டி | இந்து | B.Com
Jr.Executive @ Bank
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**25090 | வே | 1990**
நயினாதீவு | இந்து | Diploma
Branch in charge
அஸ்வினி (மேடம்)
167 செ.மீ | செவ்: 04

**21372 | வே | 1988**
உரும்பிராய் | இந்து | MBA
Sr.Finance Executive
அஸ்வினி (மேடம்)
180 செ.மீ | செவ்: 12

**21297 | வே | 1987**
அரசடி | இந்து | AAT
Managing Partner
உத்தரம் (கன்னி)
177 செ.மீ | சு.செவ்: 12

**25081 | பி | 1986**
தெஹிவளை | இந்து | MD
Investigation Officer
பூராடம் (தனுசு)
167 செ.மீ

**20931 | வே | 1993**
கந்தர்மடம் | இந்து
MBBS | Doctor
ரோகிணி (ரிஷபம்)
160 செ.மீ

**20733 | வி | 1992**
யாழ்நகர் | இந்து | BSc
Senior QS | Qatar
கேட்டை (விருச்சிகம்)

**23788 | வே | 1995**
வேலணை | இந்து | BD
Software Engineer
சித்திரை (துலாம்)
168 செ.மீ

**20538 | வே | 1989**
காரைநகர் | இந்து | B.Eng,
MBA | Electrical Engineer
விசாகம் (துலாம்)
170 செ.மீ | சு.செவ்: 08

**21102 | வே | 1987**
மீசாலை | இந்து | BSc
Civil Engineer
பூசம் (கடகம்)
174 செ.மீ

**25087 | வே | 1986**
கரம்பொன் | இந்து | MD
Consultant Software eng
பூசம் (கடகம்) | Ghana
178 செ.மீ

**21321 | வே | 1993**
புங்குடுதீவு | இந்து | BSc
Tech. Support Engineer
மூலம் (தனுசு)
185 செ.மீ | சு.செவ்: 09

**25105 | வே | 1990**
மானிப்பாய் | இந்து | Higher
Diploma | Manager
திருவோணம் (மகரம்) | Aus
165 செ.மீ | Divorced

**20706 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | BSc
Civil Engineer | UK
அவிட்டம் (கும்பம்)
170 செ.மீ | செவ்: 12

**25102 | வே | 1989**
வேலணை | இந்து | HND
Realtor & Insurance
Executive | பூராடம் (தனுசு)
170 செ.மீ | சு.செவ்: 03

**20850 | வே | 1987**
மானிப்பாய் | இந்து | BSc
Quantity Surveyor
பூராடம் (தனுசு) | UK
182 செ.மீ

**21324 | வே | 1987**
முல்லைத்தீவு | இந்து | BBA
Development Officer
கேட்டை (விருச்சிகம்)
177 செ.மீ | செவ்: 02

**21033 | கோ | 1992**
கைதடி | இந்து | BSc
Quantity Surveyor
புனர்பூசம் (மிதுனம்) | UAE
170 செ.மீ | செவ்: 07

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**25099 | வே | 1983**
மட்டக்களப்பு | இந்து | B.Com
Accounting Lead | கனடா
கார்த்திகை (ரிஷபம்)
157 செ.மீ | Divorced

**21510 | வே | 1996**
இணுவில் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
169 செ.மீ | India

**20874 | வே | 1994**
வேலணை | இந்து | Reading
MBA | Audit Trainee
உத்தரட்டாதி (மீனம்)
156 செ.மீ | செவ்: 02

**23638 | வே | 1993**
கொழும்பு | இந்து
MBBS | Doctor
பூரட்டாதி (மீனம்)
171 செ.மீ | சு.செவ்: 10

**20619 | வே | 1991**
யாழ்நகர் | இந்து | ACCA
Assistant Manager
உத்திரட்டாதி (மீனம்)
170 செ.மீ

**21471 | வே | 1990**
நீர்வேலி | இந்து | MD, SLAS
Assistant Director
மிருகசீரிடம் (மிதுனம்)
163 செ.மீ | செவ்: 08

**21333 | வே | 1985**
தும்பளை | இந்து | BA
Assistant | Divorced
சித்திரை (துலாம்) | UK
152 செ.மீ

**23782 | வே | 1996**
உரும்பிராய் | இந்து | BD
Safety Coordinator
அஸ்வினி (மேடம்) | கனடா
156 செ.மீ

**20694 | வே | 1995**
நெடுந்தீவு | இந்து
BFA | Teacher
பூராடம் (தனுசு)
153 செ.மீ

**25093 | வே | 1993**
கோப்பாய் | RC | MSc
Associate Specialized
Solutions Analyst
உத்தராடம் (தனுசு) | 160 செ.மீ

**20883 | வே | 1993**
வேலணை | இந்து | HNDA
Development Officer
விசாகம் (விருச்சிகம்)
157 செ.மீ | செவ்: 07

**21444 | வே | 1991**
திருகோணமலை | இந்து
MSc | Software Engineer
பரணி (மேடம்)
153 செ.மீ | செவ்: 08

**21105 | வே | 1987**
மானிப்பாய் | இந்து | MD
Development Officer
பரணி (மேடம்) | Divorced
165 செ.மீ | சு.செவ்: 07

**21300 | வே | 1989**
சுழிபுரம் | இந்து | BSc
Dental Surgeon | சைவம்
கேட்டை (விருச்சிகம்)
157 செ.மீ | சு.செவ்: 10

**23710 | வே | 1996**
நெல்லியடி | இந்து
BSc | Student
திருவோணம் (மகரம்)
151 செ.மீ | சு.செவ்: 06

**21132 | கோ | 1994**
கைதடி | இந்து | Following
B.Com | Management
Assistant | சதயம் (கும்பம்)
156 செ.மீ | செவ்: 02
Divorced

**23749 | வே | 1993**
வவுனியா | இந்து
MBBS | Doctor
திருவாதிரை (மிதுனம்)
160 செ.மீ | செவ்: 12

**23653 | வே | 1991**
நல்லூர் | இந்து | MBBS
Doctor | Norway
அத்தம் (கன்னி)
154 செ.மீ | சு.செவ்: 06

**23821 | வே | 1998**
வவுனியா | இந்து
A/L | Accountant
பூரம் (சிம்மம்)
154 செ.மீ | செவ்: 07

**20853 | கோ | 1999**
சுன்னாகம் | இந்து
A/L | Accountant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 08

## அருந்ததி பிரைவட் லிமிட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# 9 ஏ சித்திபெற்று சாதனை படைத்த மாணவனுக்குப் பாராட்டு



எஸ்.சபேசன்

வெளியான கா.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சம்மாந்துமறை கல்விவலயத்திற்குட்பட்ட வேப்பையடி கலைமகள் மகாவித்தியாலயத்தில் 9ஏ சித்திபெற்று சாதனை படைத்த மாணவனைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் என் பிரபாகர் தலைமையில் வேப்பையடி கலைமகள் மகாவித்தியாலயத்தில் திங்கட்கிழமை இடம்பெற்றது. 2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் வெள்ளிக்கிழமை வெளியாகியிருந்தது இதில் காரைக்குடா வேப்பையடியினைச் சேர்ந்த தபோஜன் 9ஏ சித்திகளைப்பெற்று சாதனை நிலைநாட்டியிருந்த நிலையில் இவருக்கான பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை சமூகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை வலயத்தின் ஆசிரிய ஆலோசகர் இ.குணசீலன் பிரதி அதிபர் மா.தர்மலிங்கம் உட்பட ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர்

# நிபந்தனையற்ற பேச்சுக்களுக்குத் தமிழ்க் கட்சிகள் செல்லக் கூடாது

மீண்டும் ஒருமுறை தமிழ்க்கட்சிகள் சில அரசுடன் ஒரு நிபந்தனை அற்ற பேச்சுக்குத் தயாராகி வருகின்றன. பிள்ளையைப் பெற முடியாது எனது தெரிந்துகொண்டும் மீண்டும் மீண்டும் அரசுடன் தேன் நிலவுக்குச் சென்று வெறும் கையுடன் திரும்பி வந்து தம்மையும் ஏமாற்றி எம்மக்களையும் அவமதிக்கும் செயல் தேவைதானா? தமிழர்களுடைய உரிமைகளுக்கான விடுதலைப் போராட்டத்தில் ஐம்பது ஆயிரத்துக்கும் மேற்பட்ட எமது இளைஞர்களும் யுவதிகளும் எம்மினத்தின் எதிர்காலத்துக்காகத் தமது உயிர்களை விதைத்திருக்கிறார்கள்.

அவர்களுடன் இருநூறு ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களும் தமது உயிர்களைத் தியாகம் செய்திருக்கிறார்கள். பலகோடி பெறுமதியான சொத்துக்களையும் நாம் இழந்திருக்கிறோம். எமது உறவுகள் உலகம் முழுவதும் சிதறுண்டு போய் இருக்கிறார்கள். இப்படியான இழப்புக்களுடன் கூடிய ஒரு இனத்தின் சார்பில் இதனுடன் சம்பந்தமே இல்லாத ஒரு பிரிவினரும், இதன் வலிகளைப் புரிந்து கொள்ளாத ஒரு பிரிவினரும் வலி சுமந்த தமிழர்கள் சார்பில் முடிவுகளை எடுத்து அவர்கள் மேல் சுமத்தும் முயற்சிகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணி வன்மையாகக் கண்டிக்கிறது.

சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சி அதிகாரமுள்ள இணைப்பாட்சி அடிப்படையிலானஅரசொன்றுதமிழர்களின் மரபுவழித் தாயகத்தில் அமைப்பதற்கான ஒரு முதற்கட்ட இணக்கப்பாட்டை அரசு வெளிப்படுத்தாதவரை தமிழர் தரப்பு பேசசு வார்த்தைக்குச் செல்லக் கூடாது என்பதே எமது நிலைப்பாடு.

# நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் வர்த்தக மற்றும் விற்பனை கண்காட்சி



(ஏ.எல்.எம். ஷினாஸ்)

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலகம் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திகாமடுல்ல முயற்சியாண்மை வர்த்தக மற்றும் விற்பனை கண்காட்சி நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ். ரங்கநாதன் தலைமையில் (28.11.2022) இடம்பெற்றது. இந்த வர்த்தக கண்காட்சியில் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்தி பொருட்களை விற்பனை கூடாரங்கள் அமைத்து காட்சிப்படுத்தியிருந்தனர்.

நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் ஏ. ஆனந்தன், அம்பாறை மாவட்ட சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவி பணிப்பாளர் எம்.ஐ .நாசர், நாவிதன்வெளி உதவிப் பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திருமதி.ஆர் லதாகரன், நிர்வாக உத்தியோகத்தர் கே. யோகேஸ்வரன், சமூர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எஸ். சிவம், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ். கலாயினி பி .அஜ்ஜனா, கே. சசிவதனி உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# பெண்களால் அமைக்கப்பட்ட இரு விற்பனை நிலையங்களை திறந்து வைக்கும் நிகழ்ச்சி

வி.சுகிர்தகுமார்

அம்பாரை மாவட்டத்தில் இயங்கிவரும் பாதிப்புற்ற பெண்கள் அரங்கமானது பெண்களை வலுவூட்டும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை பலவருடங்களாக முன்னெடுத்து வருகின்றது. இதன் ஓர் அங்கமாக சேர்ச் போ கொமன்ட் கிறவுண்ட் **(Search for Common Ground)** ) நிறுவனத்தின் அனுசரணையுடன் கடந்த 3 வருடங்களாக பெண்களை பல்வேறு துறைகளிலும் வலுவூட்டும் பயிற்சி நெறிகள் திட்ட அறிக்கைகள் சமர்ப்பித்தல் அரசியலில் பெண்களின் வகிபாகம் அது தொடர்பான கலந்துரையாடல்கள் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கமைவாக பெண்கள் பெற்றுக்கொண்ட பயிற்சி நெறிக்கு அமைவாக அவர்களால் முன்வைக்கப்பட்ட திட்ட அறிக்கையின் பயனாக சேர்ச் போ கொமன்ட் கிறவுண்ட் நிறுவனத்தின் நிதி ஈட்டத்தின் மூலம் ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் முன்பாக நடமாடும் இரு விற்பனை நிலையங்களை அமைத்து அதனை திறந்து வைக்கும் நிகழ்வு இன்று காலை இடம்பெற்றது.

ஆலையடிவேம்பு வில்கிளப் பெண்களின் ஒருங்கிணைந்த தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் மற்றும் பிரதேச சபை தவிசாளர் கிரோஜாதரன் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஹிசைன்டீன் நிருவாக உத்தியோகத்தர் க.சோபிதா தலைமையக சமுர்த்தி முகாமையாளர் கிருபாகரன் கிராம உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோகத்தர் பரிமளவாணி சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ரவிச்சந்திரன் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் முஸ்பிறா பாதிப்புற்ற பெண்கள் அரங்க இணைப்பாளர் சைமன் வாணி திட்ட இணைப்பாளர் வாணி சுதா திட்டத்தினை முன்னின்று செயற்படுத்த உதவிய பிரதேச சபை உறுப்பினர் கிந்துஜா உள்ளிட்ட பிரதேச சபை உறுப்பினர்கள் வில்கிளப் பெண் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பிரதேச செயலாளர் மற்றும் நிருவாக உத்தியோகத்தரினால் இரு விற்பனை நிலையங்களும் திறந்து வைக்கப்பட்டதுடன் விற்பனையும் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் பெண்களின் சுயதொழில் வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# KSCயின் வருடாந்த பொதுக் கூட்டம்

கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் தலைவர் பே.சடாற்சரராஜா அவர்களின் தலைமையில் 2022.12.04ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கடந்த 06.11.2022 அன்று நடைபெற்ற நிர்வாக சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக, கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டு, புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படவுள்ளதாக தலைவர் பே.சடாற்சரராஜா தெரிவித்துள்ளார்.

# வாழைச்சேனை ஆயிஷா வித்தியாலயம் மட்டக்களப்பு மத்தி வலயத்தில் முதலிடம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

வெளியான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் படி வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளதாக பாடசாலை அதிபர் என். சஹாப்தீன் தெரிவித்தார். பரீட்சைக்குத் தோற்றிய 55 மாணவிகளில் எம்.ஆர்.எப். றிஸ்லா, எம்.யூ.எப்.ஹனா, எஸ்.ஏ.எப். உம்றா, ஏ.பி. அஸ்பா ஆகிய நான்கு மாணவிகள் அனைத்துப் பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளதுடன், ஆறு மாணவிகள் எட்டு ஏ சித்திகளை பெற்றுள்ளனர்.

அதேபோன்று பரீட்சைக்கு தோற்றிய ஏனைய மாணவிகளும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். அந்தவகையில், மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் தரப்படுத்தலின் படி ஆயிஷா வித்தியாலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயம் கடந்த வருட பெறுபேற்றிலும் வலயத்தில் முதலிடம் பெற்றது.

இவ்வாறு சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவிகளுக்கும், பரீட்சை காலத்தில் பாடசாலையில் சேவை புரிந்த எம்.ரீ.எம்.பரீட் அதிபருக்கும் க.பொ.த சாதாரண தர வகுப்பு இணைப்பாளர் ஆசிரியர் கே.ஆர்.எம்.இர்ஷாத், வகுப்பாசிரியர்களான ஜே.எம்.நியாஸ், எம்.எல். எம்.முஸம்மில் உட்பட கற்பித்த ஆசிரியர்கள் அனைவருக்கும் பாடசாலை அதிபர் என். சஹாப்தீன் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

# அக்கரப்பத்தனைபிரதேசசபையின் தலைவர் ராமன் கோபால்

தலவாக்கலை பி.கேதீஸ்

நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் ,லங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுசெயலாளர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது. ,தில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், ,.தொ.காவின் தேசிய அமைப்பாளர் சக்திவேல் உட்பட அரச அதிகாரிகளும் கலந்துக்கொண்டனர். ,க்கூட்டத்தில் அக்கரப்பத்தனை பிரதேச சபையின் தலைவர் ராமன் கோபால் உரையாற்றும்போது

அக்கரப்பத்தனை பிரதேசத்தில் 103 தோட்டங்கள் ,ருக்கின்றன. ,ங்கு மூன்று அரச வைத்தியசாலைகள் காணப்படுகின்றன.ஆனால் ,ங்கு மரண பரிசோதகர் ,ல்லை, திருமண பதிவாளர் ,ல்லை ,தனால் ,ப்பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர். ,ப்பிரதேசத்திலுள்ள சமுர்த்தி உப காரியாலயமொன்று திறந்த நாள் முதல் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளது. மேலும் போடைஸ் டயகம வீதி உடைந்து குன்றும் குழியுமாக காணப்படுவதால் அதில் பயணிக்கும் வாகன சாரதிகள் தினந்தோறும் அச்சதுடனையே பயணிக்கின்றனர். எனவே பிரதேச மக்களின் நலன் கருதி ,தனை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் லிந்துலையிலிருந்து டயகம வரையிலான வீதியும் குன்றும் குழியுமாகவே காணப்படுகின்றது. எனவே அதனையும் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் மெராயா எல்ஜின் மேல் பிரிவில் மண்சரிவு ஏற்பட்டதன் காரணமாக மெராயா எல்ஜின் வீதியும் தாழிறங்கியுள்ளது. ,தனால் மூன்று தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மன்றாசி திஸ்பனை விளையாட்டு மைதானத்தில் குவிக்கப்பட்டுள்ள கற்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே ,ப்பிரச்சினைகள் தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# வடக்கு கிழக்கிலுள்ள வளங்களை சரியான முறையிலே பயன்படுத்தினால் மற்றவர்களிடம் கையேந்த வேண்டிய அவசியமில்லை



(ரக்ஸனா)

வடக்கு கிழக்கு மாகாணங்களிலே போதுமான வளங்கள் உண்டு அவற்றைச் சரியான முறையிலே பயன்படுத்தினால் மற்றவர்களிடம் கையேந்த வேண்டிய அவசியமில்லை என கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் சங்கங்களின் பதிவாளருமான பொறியியலாளர் என். சிவலிங்கம் தெரிவித்தார்.

ஏறாவூர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு இலாபப் பங்கும் சீருடையும் வழங்கும் நிகழ்வு ஏறாவூர் கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர் சபைத் தலைவர் எம்.எல். அப்துல்லத்தீப் தலைமையில் ஏறாவூர் கூட்டுறவுச் கூடத்தில் செவ்வாய்க்கிழமை. கிழமை.29.11.2022 இடம்பெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், மாகாணத்தில் கூட்டுறவுச் சங்கம் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது அதற்குக் காரணம் வடக்கு கிழக்கில் ஏற்பட்ட அசாதாரண நிலையிலும் நாங்கள் எதற்கும் சளைத்தவர்களல்ல என்பதை நிரூபித்திருக்கின்றோம். பல இடர்களைச் சந்தித்த போதும் மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே நாங்கள் மீள் எழுந்து கொண்டிருக்கின்றோம்.

அதன் காரணமாகவே ஏறாவூர் கூட்டுறவுச் சங்கம் மிகவும் உன்னதமான நிலையில் இயங்கிக் கூட்டுறவின் அச்சாணியாக இருந்து இங்கு பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பணியாளர்களும் அதன் பணிப்பாளர் சபைத் தலைவரும்தான். கட்டுப்பாட்டோடு இருந்து பவணியாற்றுவதால் சாதனைகளை நிலைநாட்ட முடியும். சீன அரிசி வழங்கலில் நாங்கள் பங்கெடுத்து கூட்டுறவுச் சங்கங்களின் பெயரைக் கெடுத்துக் கொள்ளவில்லை. அந்த அரிசி தரமற்றது என்ற விமர்சனம் பரவலாக இருந்தது." என்றார்.

ஏறாவூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஏறாவூர் கூட்டுறவு வதைத்தியசாலை உள்ளிட்ட இன்னும் பல அதன் கிளை நிறுவனங்களில் பணியாற்றும் 58 பணியாளர்களுக்கு சுமார் 3 இலட்சம் ரூபாய் இலாபப் பங்குப் பணம் பகிர்ந்தளிக்கப்பட்டதோடு சுமார் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான சீருடைப் பொதிகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்நிகழ்வுகளில் மட்டக்களப்பு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.வி. தங்கவேல் சங்க உப தலைவர் எம்.பி.எம்.ஏ. சக்கூர், பொதுமுகாமையாளர் யூ.எல். சபீர் உட்பட கூட்டுறவு அதிகாரிகள். பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# 11000 மி.லீ கசிப்பு மீட்பு : 6 சந்தேக நபர்கள் கைது



(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்பட பல இடங்களில் கசிப்பு, மற்றும் கோடா என்பன சட்டவிரோதமான முறையில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக களுவாஞ்சிகுடி பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, துரிதமாக செயற்பட்ட பொலிசார் பெருமளவு கசிப்பு மற்றும் கோடா போன்றவற்றையும், அதன் உற்பத்திற்கு உபயோகிக்கப்பட்ட பொருட்களையும், சம்மந்தப்பட்ட ஒரு பெண் உட்பட 6 பேரையும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்துள்ளதுடன், 2 மோட்டார் சைக்கிளையும் சனிக்கிழமை (26) கைப்பற்றியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் காஞ்சிரங்குடா பகுதியிலிருந்து பழுகாமம் பகுதிக்கு வரலிகளில் 2 மோட்டார் சைக்கிளில் சட்டவிரோத கசிப்பு எடுத்து வந்த நிலையில் அதனை கையும் மெய்யும்மாக பொலிசார் மிகவும் சூட்சுமமான முறையில் பறிமுதல் செய்து, சந்தேக நபர்களையும், கைது செய்துள்ளனர். இந்நிலையில் மகிழூர், மற்றும் மகிழூர்முனை ஆகிய பகுதிகளிலும், கசிப்பு உற்பத்தி செய்து வந்த நிலையங்கள் முற்றுகையிடப்பட்டு அதனை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

இந்நடவடிக்கைகளில் 11000 மில்லி லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளதுடன், 1 பெண் அடங்கலாக 6 சந்தேக நபர்கபளைக் கைது செய்துள்ளதுடன் 2 மோட்டார் சைக்கிள்களையும், பரல்கள், கேஸ் அடுப்பு, கேஸ் சிலிண்டர்கள், பானைகள், போன்றவற்றையும், கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பொருட்களையும், கசிப்பையும், சந்தேக நபர்களையும், நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிசார் இதன்போது தெரிவித்தனர். மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனையின் பெயரில், களுவாஞ்சிகுடி பிரதே உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலில், களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையப் பெறுப்பதிகாரி அபேயவிக்கிரமவின் தலைமைத்துவத்தின் கீழானபொலிசஸ்குழு இந்நடவடிக்கைகளை மேற் கொண் டிருந் தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் வரலாற்று சாதனை

அஸ்ஹர் இப்றாஹிம்

வெளியிடப்பட்ட க.பொ.த.சாதாரணதர பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை களுவாஞ்சிகுடி வரலாற்றில் 18 மாணவர்கள் சகல பாடங்களிலும் அதி திறமைச் சித்தி பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளனர்.

உயர்தர உயிரியல், கணிதம், தொழில்நுட்பம் , கலை மற்றும் வர்த்தக துறைகளில் கல்வி பயில்வதற்கு அதிகளவிலான மாணவர்கள் தகுதி பெற்றுள்ளதுடன் இப் பரீட்சை முடிவுகள் எதிர்காலத்தில் இப் பாடசாலை கல்வி வரலாற்றில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் என பாடசாலை அதிபர் எம்.சபேஸ்குமார் தெரிவித்தார்.

இதே வேளை பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட களுதாவளை மத்திய மகா வித்தியாலயத்தில் 6 மாணவர்களும் , தேத்தாத்தீவு மகா வித்தியாலயத்தில் 5 மாணவர்களும் , செட்டிப்பாளையம் மகா வித்தியாலயத்தில் 4 மாணவர்களும் , கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயம் மற்றும் பெரியகல்லாறு மகா வித்தியாலயம் ஆகியவற்றில் தலா 2 மாணவர்களும் , சிறி சக்தி மகா வித்தியாலயம் மற்றும் துறைநீலாவணை மகா வித்தியாலயம் ஆகியவற்றில் தலா ஒரு மாணவருமாக மொத்தம் 40 மாணவர்கள் சகல பாடங்களிலும் அதி திறமைச் சித்தி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# முதற் தடவையாக 9ஏ சித்திகளைப் பெற்ற மாணவரை நேரில் சென்று பாராட்டிய கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர்



(எம்.என்.எம்.அப்ராஸ்,நூருல் /ஹுதா உமர்)

அண்மையில் வெளியாகிய க.பொ.த.(சா/த)ப் பரீட்சை பெறுபேறுகளின் அனைத்துப் பாடங்களிலும் 9ஏ சித்திகளைப் பெற்ற கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலய மாணவன் என்.எம். நப்றத் மற்றும் 7யு,2டீ பெற்ற மாணவி எஸ்.எச்.எப்.ஹீறா ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயதுக்கு கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் ச/ஹுதுல் நஜீம் நேற்று(28) நேரில் சென்று மாணவர்களுக்கு தனது வாழ்த்தினை தெரிவித்ததுடன் மலர் மாலை அணிவித்து கௌரவித்துப் பாராட்டினர். இதன் போது பாடசாலையின் அதிபர் ஏ.ஜி.எம். றிஸாத்,பாடசாலையின் பிரதி அதிபர்,உதவி அதிபர், பகுதித் தலைவர்கள் சித்தி பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலையில் முதன்முதலாக க.பொ.த சாதரண தர பிரிவு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் (2021) மாணவன் என்.எம்.நப்றத் அனைத்து பாடங்களில் 9யு சித்தி பெற்று பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக வரலாற்றுச் சாதனை படைத்துள்ளதோடு மற்றுமொரு மாணவி எஸ்.எச்.பாத்திமா ஹிறா **7A,2B** என்ற சித்தியயைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது குறித்த பாடசாலை வலய மட்ட பாடசாலைகள் தரப்படுத்தலில் நான்காவது இடத்தை பெற்றுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# நானாட்டான் பிரதேச செயலகம் கொண்டாடிய சர்வதேச சிறுவர் தினம்



(வாஸ் கூஞ்ஞ)

நானாட்டான் பிரதேச செயலகம் 2022ம் ஆண்டிற்கான சர்வதேச சிறுவர் தினத்தை கடந்த வாரம் இறுதியில் சூரியகட்டைக்காடு புனித செபஸ்தியார் ஆலய வளாகத்தில் வெகு விமரிசையாக கொண்டாடியது. இவ் தினத்தை முன்னிட்டு மரநடுகை கலைநிகழ்ச்சிகள் மற்றும் பெற்றோர் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெற்றன. இவ் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக நானாட்டான் பிரதேச செயலாளர் மாணிக்கவாசகர் சிறீஸ்கந்தகுமார் சிறப்பு விருந்தினர்களாக நானாட்டான் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய குருக்கள் ஜி.வி.கதிரேசன் குருக்கள் கட்டக்காடு பங்குத் தந்தை அருட்பணி பி.ஸ்ரனிஸ் சோசை அடிகளார் மன்னார் ஜெசாத் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் எஸ்.இருதயநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ் நிகழ்வில் சுமார் நானூறுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

www.supeedsam.com




# விபத்தில் ஒருவர் உயிரிழப்பு ஐவர் காயம்



செங்கலடி நிருபர்

மட்டக்களப்பு கிரான் பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஐவர் காயமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர் ஞாயிற்றுக்கிழமை (27) காலை இடம்பெற்ற இவ்விபத்தில் முறக்கொட்டன்சேனை தேவாபுரப்பகுதியைச் சேர்ந்த நல்லராசா நேசராசா (வயது 46) ஆறு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார். கரை வலை மீன்பிடிக்கு பயன்படுத்தப்படும் உழவு இயந்திரத்தில் முறக்கொட்டான் சேனை பகுதியில் இருந்து கிரான் நாகவத்தை கடற்கரைப் பகுதிக்கு மீன்பிடிப்பதற்காக ஐவர் உழவு இயந்திரத்தில் சென்ற நிலையில் பிரதான வீதியில் இருந்து குறுக்கு வீதிக்கு உழவு இயந்திரத்தை திருப்பும் போது பின்னால் வந்த கார் உழவு இயந்திரத்துடன் மோதி உளவு இயந்திரத்தில் இருந்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் கார் சாரதி மற்றும் உழவு இயந்திரத்தில் இருந்த நான்கு பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

காரில் வந்தவர்கள் களுதாவளை ஆலயத்திற்கு பூஜை ஒன்றுக்க வந்துள்ளார்கள் என தெரியவருகிறது. காரின் சாரதி வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஏனையவ இருவர் சந்திவெளி பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். மேலும் இருவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்த சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். உயிரிழந்தவரின் சடலம் சந்திவெளி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பரிசோதனையின் பின்னர் உறவினர்கள் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. வாழைச்சேனை பொலிசார் மேலதிக நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார்கள். விபத்தில் சிக்கிய கார் மற்றும் உழவு இயந்திரம் பகுதி அளவில் சேதமடைந்துள்ளது.

# வேப்பையடி கலைமகள் ம.வித்தியாலய மாணவன் 9 ஏ சித்திபெற்று சாதனை



**எஸ்.சபேசன்**

சம்மாந்துறை கல்விவலயத்திற்குட்பட்ட வேப்பையடி கலைமகள் மகாவித்தியாலயத்தில் லோகேஸ்வரன் தபோசன் 9 ஏ சித்திபெற்று சாதனை படைத்துள்ளதாக அதிபர் என் .பிரபாகர் தெரிவித்தார். 2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள் வெள்ளிக்கிழமை வெளியாகியிருந்தது இதில்இகாரைக்குடாவேப்பையடியினைச் சேர்ந்த லோ.தபோசன் 9 ஏ சித்திகளைப் பெற்றுசாதனைநிலைநாட்டியிருப்பதுடன் பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றி மாணவர்களில் 99.25 வீதமான மாணவர்கள் உயர்தரத்திற்குத் தகுதி பெற்றிருப்பதாக அதிபர் தெரிவித்தார் அதே வேளை சித்தியடைந்த மாணவனை அப்பிரதேசத்தினைச் சேர்ந்த பொது அமைப்புக்களும் பெற்றோர்களும் பாராட்டி இருப்பதுடன் பாடசாலையின் அதிபர் என் .பிரபாகர் அவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் பெற்றோர்கள் நன்றிதெரிவித்துள்ளனர்.

# செவித்திறன் குறைபாடுடைய பாடசாலை சமூகத்தினருக்கான ஆண்டு நிறைவு



**(அ . அச்சுதன் )**

திருகோணமலை லிங்கநகரில் அமைந்துள்ள செவித்திறன் குறைபாடுடைய மாணர்ளுக்கான 2022 ம்ஆண்டு நிறைவினை கொண்டாடும் முகமாக அப் பாடசாலையின் பணிப்பாளர் வரதசீலன் அவர்களின் ஏற்பாட்டிலும் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் கண்காணிப்பாளர் ஞ.ற.தேவகுமார் அவர்களின் ஆதரவிலும் நிகழ்வு நேற்று ஆரம்பமாகியிருந்தது.

நிகழ்வின் தலைமை விருந்தினராக இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் காதுகேளாதோருக்கான நிறுவுனர் ஞ.ஞானராஜா அவர்களும், நிகழ்வை கௌரவிக்க கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்தி பிரதிப்பணிப்பாளர் சு.நிமலஞ்சன் அவர்களும்,கிழக்கு மாகாண சிறப்பு கல்வி ADE எ.ஜனாத்தனன் .ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். நிகழ்வு குறித்து தலைமை விருந்தினர் உரையாற்றுகையில் மாற்றுத்திறனாளிகள் சமூத்தில் சமமாக மதிக்கப்பட வேண்டியவர்கள் அவர்களுக்குள் இருக்கும் தனித்திறமை இனங்கானப்பட்டு அர்களை அந்த துறையின் பால் நகர்த்தப்படும்போது அவர்களும் வல்லமை மிக்கவர்களாக மாறுவர் என குறிப்பிட்டிருந்தார்.

# வைத்திய பரிசோதனை முகாமும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பிரசவப் பொருட்கள் வழங்கி வைப்பும்



**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

வைத்திய பரிசோதனை முகாமும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பிரசவப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வும் சனிக்கிழமை (26) வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இலங்கை குடும்பத்திட்ட சுகாதார சேவை நிலையத்தின் மட்டக்களப்பு நிலையம், கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து இந்த நிகழ்வை நடாத்தியது.

சுகாதார சேவை நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் எஸ்.எச்.இம்தியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வாழைச்சேனை மத்தி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ரீ.எம்.நஜீப் கான், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையின் மனநல வைத்தியர் டான் சௌந்தரராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிகிச்சைகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார்கள்.

இந் நிகழ்வில், குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்பட்டோர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன், தொற்றும், தொற்றா நோய் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. அத்துடன், தெரிவு செய்யப்பட்ட பதினைந்து கர்ப்பிணித் தாய்மாருக்கு இருபத்தையாயிரம்ரூபாய்பெறுமதியான பிரசவப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தம் வேலைத்திட்டம் அம்பாறையில் ஆரம்பம்



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

ஜனாதிபதியின் தேசிய உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தம் வேலைத்திட்டம் அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதனடிப்படையில், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் அனுசரணையில் பிரதேச செயலகமும் சாய்ந்தமருது கமநலச் சேவை நிலையமும் இணைந்து பயிர் விதைகள் நடும் வேலைத்திட்டம் மாவடிப்பள்ளி பிரதேசத்தில் மேட்டு நிலத்தில் நடப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்ச்சித்திட்டம் சாய்ந்தமருது உதவிப்பிரதேச செயலளர் எம்.ஐ. முஆபிக்கா தலைமையில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர், விவசாய உத்தியோகஸ்தர்கள், கமநலச் சேவை காரியாலய பிரதம இலிகிதர் ஐ.எல்.ஏ.அஸீஸ், விவசாயிகளின் தலைவர் ஐ.எல்.ஏ.மஜீத் மற்றும் பிரதேச விவசாயிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# அல்ஹம்றா மத்திய கல்லூரி வரலாற்றில் இருவர் 9A பெற்று வரலாற்றுச் சாதனை

**எம்.எம்.நௌபீக்**
**தோப்பூர்**

தற்போது வெளியாகியுள்ள க.பொ.த சாதாரண தரப் பரிட்சையில் தோப்பூர் கோட்டத்திற்குட்பட்ட அல்ஹம்றா மத்திய கல்லூரியில் கல்வி கற்ற இரண்டு மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் யு சித்தி பெற்று பாடசாலைக்கும், ஊருக்கும் வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளதாக கல்லூ ரியின் முதல்வர் எஸ்.எம்.றஹீம் தெரிவித்தார். அல்ஹம்றா வரலாற்றில் முதன் முறையாக இரண்டு மாணவர்கள் 9 யு சித்தி பெற்று பாடசாலையில் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 70 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் 2011ஆம் ஆண்டில் முதன்முதலாக 9யு சித்தி ஒரு மாணவன் பெற்ற நிலையில் எஸ்.எம். ரஹீம் அதிபராக பொறுப்பேற்றதிலிருந்து 2019, 2020 ஆம் ஆண்டுகளில் தலா ஒரு மாணவன் 9யு சித்தி பெற்ற நிலையில் இம்முறை இரண்டு மாணவர்கள் 9யு சித்தி பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

# அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பற்றிமா சாதனை



**(வி.ரி.சகாதேவராஜா)**

அண்மையில் வெளியான க.பொ.த.சாதாரண தரப் பரிட்சை பெறுபேறுகளின்படி, அம்பாறை மாவட்டத்தில் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரி சாதனை படைத்து முன்னணியில் உள்ளது. கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையில் இம்முறை க.பொத. சா.த பரீட்சையில் 32மாணவர்கள் 9ஏ சித்திகள் பெற்றுச்சாதனை படைத்துள்ளனர் என்று அதிபர் அருட்சகோ. செபமாலை சந்தியாகு தெரிவித்தார்.

அங்கு மேலும் 20 மாணவர்கள் 8ஏ சித்திகளைப் பெற்றுள்ளதுடன், அனைத்து மாணவர்களும் சித்திபெற்றுள்ளனரென்று மேலும் அவர் தெரிவித்தார். 236மாணவர்கள் தோற்றியதில் 227மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.96 வீத சித்தி. இது கல்முனை வலயத்திலே உள்ள சா.தர வகுப்புகளுள்ள 33 பாடசாலைகளுள் முதலாவது அதிகூடிய சித்தி வீதமாகும். இது வரலாற்றில் சிறப்பான பெறுபேறு என்றும் இதற்காக உழைத்த ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் கல்விஅதிகாரிகள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றிகூறுவதாக அவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் தனியொரு பாடசாலை அதிகூடிய 32 மாணவர்கள் 9ஏ சித்திகளை பெற்றது கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் மாத்திரமே என்பது குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை வலயத்தில் 44 மாணவர்களுக்கு 9 ஏ

**( வி.ரி. சகாதேவராஜா)**

சம்மாந்துறை வலய வரலாற்றில், க.பொ.த. சா.தர பரீட்சை பெறுபேறுகளின்படி முதல் தடவையாக 44 மாணவர்கள் 9ஏ சித்திகளைப் பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளதாக சம்மாந்துறைவலயக்கல்விப்பணிப்பாளர் எஸ் எம் எம் . அமீர் தெரிவித்தார். இச் சாதனையில் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் முப்பது(30) மாணவர்களுடன் பிரதான பங்கை வகிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதைவிட, நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் நான்கு மாணவர்களும், சம்மாந்துறை அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூ ரியில் நான்கு மாணவர்களும் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர். ஏனைய ஆறு பாடசாலைகளில் தலா ஒவ்வொரு மாணவரும் 9 ஏ சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர் .கடந்த வருடம் 26மாணவர்கள் 9 ஏ சித்திகள் பெற்றிருந்தனர். இம் முறை அது 18 ஆல் அதிகரித்து 44 ஆக உயர்ந்து சாதனை படைத்துள்ளது. இதேவேளை, கடந்த வருடம் 45 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்தியின்மையைப் காட்ட, ,ம்முறை அது 20 ஆல் குறைந்து 25ஆக மாறியுள்ளது. இது ஆரோக்கியமான வளர்ச்சி என்றும் அவர் தெரிவித்தார். இதற்காக ஒத்துழைத்த மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர்கள் ,ஆசிரியர்கள், கல்வி சார்ந்த உத்தியோகத்தர்கள் அனைவரையும் நன்றியுடன் பாராட்டுகின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

# சுவாமி விவவேகானந்தர் இலங்கைக்கு விஜயம் செய்து 125வது ஆண்டை முன்னிட்டு களுதாவளையில் போட்டி நிகழ்ச்சிகள்

**(ரக்ஸனா)**

சுவாமி விவவேகானந்தர் இலங்கைக்கு விஜயம் செய்து 125வது ஆண்டை முன்னிட்டு மட்டக்ககளப்பு களுதாவளை இந்து மாமன்றத்தின் ஏற்பட்டில் களுதாவளையில் செயற்பட்டுவரும் 8 அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே பல்வெறு போட்டி நிகழ்வுகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் சுவாமி விவேகானந்தரின் வீர மொழிகள் எனும் தலைப்பிலான போட்டி நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை(27) களுதாவளை ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் நடைபெற்றது.

களுதாவளை இந்து மாமன்றத்தின் தலைவர் ப.குணசேகரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் களுதாவளையில் இயங்கிவரும் 8 அறநெறிப் பாடசாலைகளிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவ மாணவியர்கள் இதன்போது போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருந்தனர். இப்போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டும் மாணவர்களுக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி களுதாவளை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ள சுவாமி விவேகானந்தரின் இலங்கைக்கு விஜயம் செய்து 125 வது ஆண்டை முன்னிட்டு நடைபெறவுள்ள விழாவின்போது பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன், களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம், ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இந்நிழ்வுகழ் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



# சதா சரவணபவனின் தீட்டு வீடு நாடக நூல் ஓம் நாதம் பல்திறன் வட்டு வெளியீடு



மட்டக்களப்பு மக்கள் வங்கியின் மேனாள் உதவிப்பிராந்திய முகாமையாளருமான சதா சரவணபவனின் தீட்டு வீடு நாடக நூல் மற்றும் ஓம் நாதம் பல்திறன் வட்டு வெளியீடும் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் இசை இளவல் ஜீவம் ஜோசப் அரங்கில் அண்மையில் நடைபெற்றது. எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் ஏற்பாட்டில் மூத்த எழுத்தாளர் தமிழறிஞர் கலாநிதி அகளங்கள் தலைமையில் இவ் வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது.

ஆசியுரையினை இராமகிருஷ்ண மிசன் மட்டக்களப்பு சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ் வழங்க, அறிமுகவுரையினை எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் மேலாளரும் இலங்கை இளைஞர் பாராளுமன்ற மேனாள் உதவிப்பணிப்பாளருமான குழந்தை எழுத்தாளர் டாக்டர் ஓ.கே.குணநாதன் நிகழ்த்தினார். நிகழ்வில், நூல் வெளியீடு, பல்திறன் வட்டு வெளியீடு, படைப்பாளி கௌரவம், அதிதிகளின் பாராட்டுரைகள், நூலாசிரியரின் மகிழ்வுரை ஆகியனவும் இடம்பெற்றன.

முதன்மை அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், மட்டக்களப்பு மாவட்ட மேனாள் அரசாங்க அதிபர்களான செ.புண்ணியமூர்த்தி, ம.உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழரியன் தொலைக்காட்சிப் பணிப்பாளரும், மட்டக்களப்பு, மக்கள் வங்கியின் முன்னாள் உதவி பிராந்திய முகாமையாளருமாகிய நூலாசிரியர் சதா. சரவணபவன் களுதாவளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கலை, இலக்கியப் பாரம்பரியத்தினைக் கொண்ட இவர் சிறந்த நாடகக் கலைஞர். இவரின் தாய்வீட்டு வளவிலேயே கூத்துக்களரி இருந்திருக்கின்றது. இக்கூத்துக்கலரியில் நூ ற்றுக்கும் அதிகமான நடகங்களும், நாட்டுக் கூத்துக்களும் இடம்பெற்றுள்ளன.

குழந்தைப் பருவத்திலிருந்தே கலைத்துறையில் ஆர்வம் இவர் 1970களில் பள்ளியில் கல்வி பயிலும் காலத்தில் களுதாவளை மகாவித்தியாலத்தில் இடம்பெற்ற "கண்ணகி வளக்குரைத்தல்" கண்ணகி பாத்திரமேற்று நடித்துள்ளார். தொடர்ந்து மார்க்கண்டேயர் புரான நாடகத்தில் மார்கண்டேயர் பாத்திரமாவும், "சிவராத்திரி" புராண நாடகத்தில் வேடனாகவும் பாத்திரமேற்று நடித்துள்ளார்.

1976 காலப்பகுதிகளில் :மெழுகுவர்த்தி எரிகிறது" என்ற நாடகப்பிரதியினை முதன்முதலில் எழுதி எழுத்துத் துறைக்கு காலடியெடுத்து வைதுளார். பின்னர் "பாசத்தின் பிணைப்புகள்", "சொந்தமில்லை பந்தமில்லை வாடுவது ஒரு பறவை", "வாடிய மலரொன்று மீண்டும் மலர்கிறது" போன்ற மேடை நாடகங்களையும் எழுதி இயக்கியுள்ளர்.

நாடகத்துறையிலிருந்து இவர் 1981 களில் "தேவதை உனைத் தேடுகிறாள்" என்ற நாவலை எழுதியுள்ளார். பல கலைத் திறமைகளைக் கொண்ட இவர் இதுமாத்திறமின்றிகதா கலாட்சேபம் செய்வதிலும், சமய சொற்பொழிவாற்றுவதிலும், மேடை அறிவுப்புக்களை செய்வதிலும் சிறந்து வழங்குகின்றார். இதுதவிர நகைச்சுவைக் கதம்பங்கள், ஓரங்க நாடகங்கள் மூலம் மக்களை மகிழ்வித்தல் போன்ற செயற்பாடுகளில் திறமையுடையவராகவும், பலகுரல்களில் பாடவும் பேசவும் திறமையுடையவராகவும் காணப்படுகின்றார்.

இலங்கை எழுத்தாளர்கள், கலைஞர்களின் படைப்புக்கள், மண்ணின் பாரம்பரிய விழுமியங்கள், வரலாறுகளை ஆவணப்படுத்த வேண்டும் என்பதில் பெரு அவாக்கொண்ட நல்ல மனிதர். இவரது இன்னும் பல படைப்புக்கள் வெளிவரவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# தம்பலகாமம் பிரதேச சாகித்திய விழா





**ஹஸ்பர்**

தம்பலகாமம் பிரதேச சாஹித்திய விழா நிகழ்வுகள் சனிக்கிழமை(26) தம்பலகாமம் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சாஹித்திய அதிகார சபையின் ஏற்பாட்டில் தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது. மூவினங்களும் வாழும் இப்பிரதேசத்தில் அனைவரையும் அனைத்து இவ்விழாவினை ஏற்பாடு செய்தமை வரவேற்கத்தக்கது. இவ்வாறான விழாக்கள் மூலம் இனங்களுக்கிடையே நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட ஏதுவாக அமையும் என்று இதன்போது உரையாற்றிய தம்பலகாமம் பிரதே சபை தவிசாளர் ஏ.ஜீ.சம்பிக்க பண்டார தெரிவித்தார்.

பாரம்பரிய கலை கலாசார அம்சங்கள் அருகிவருகின்றவேளை அதனை மீள உயிர்ப்பிப்பதற்காக வருடத்திற்கு ஒரு தடவையேனும் இவ்வாறான கலாசார நிகழ்வுகளை நடாத்துவது சிறப்பிற்குரியது. அத்துடன் அனேகமான பாடசாலை மாணவர்கள் பிரதேச மட்ட போட்டிகளில் கலந்து கொண்டு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை இதன்போது பெற்றுக்கொண்டதனை அவதானிக்கக்கூடிதாக இருந்தது. இது நல்லதொரு திருப்பு முனையாகும். காரணம் தற்போதைய சூழ்நிலையில் சமூக ஊடகங்களின் பாவனை காரணமாக பாரம்பரிய அம்சங்கள், எழுத்தாற்றல், ஆக்கத்திறன் என்பன எம்மைவிட்டு தூரமாகி செல்கின்றது. அவ்வாறானதொரு நிலையில் சிறுவர்களின் இலக்கியம் தொடர்பான ஆர்வம் இத்துறை தொடர்பான வளர்ச்சிக்கு வலு சேர்க்கும் என்று இதன்போது பிரதம அதிதியாக கலந்து கொண்ட மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தெரிவித்தார்.

பல இயற்கை வளங்களை கொண்ட ரம்மியமான பிரதேசமே தம்பலகாமம். எம்மவர் மத்தியில் நிலவிய பல பாரம்பரிய கலாசார அம்சங்கள் தற்போதைய தொழிநுட்ப வளர்ச்சியால் புதிய சமூகத்தினர் மத்தியில் அருகி வருகின்றது. எனவே பாரம்பரிய அம்சங்களை பாதுகாக்க அனைவரும் முன்வரவேண்டும் என்று இதன்போது தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தெரிவித்தார்.

பிரதேச செயலகம் மற்றும் பிரதேச இலக்கிய பேரவைஇணைந்துஇதன்போது"ஏர்முனை"சஞ்சிகையின் மூன்றாவது வெளியீட்டை வெளியிட்டுவைத்ததுடன் பிரதேச மட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களும் இதன்போது பிரதம அதிதி,கௌரவ அதிதி, பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளினால் வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ்வில் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், சர்வமத தலைவர்கள்,கலைஞர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை வலயத்தில் 106மோணவர்கள் 9A சித்தி பெற்று சாதனை

**( வி.ரி. சகாதேவராஜா)**

கல்முனை வலயத்தில், இம்முறை வெளியான க.பொ.த.சா.தரப் பரீட்சை பெறுபேறுகளின் படி 106 மாணவர்கள் 9 ஏ சித்தி பெற்று சாதனை படைத்துள்ளதாக கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ். ச/ஹதுல் நஜீம் தெரிவித்தார். கடந்த ஆண்டு 87 மாணவர்கள் 9 ஏ சித்திகளை பெற்றிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறை 2815 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி இருந்தார்கள். இவர்களில் 3 சி 2 எஸ் சித்திகளை 2194 மாணவர்களும் ,3 சி 3 எஸ் சித்திகளை 1949 மாணவர்களும் பெற்று சித்தி அடைந்தார்கள். ஆக, 41 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்தி பெற தவறி இருக்கின்றார்கள். மொத்தமாக 78சதவீத மாணவர்கள் சித்தி பெற்றிருக்கின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இம்முறை வெளியான பெறுபேறுகளின் படி ,வலயத்தில் முதல் அதிகூடிய 96மூ சித்தி மற்றும் அதிகூடிய 32 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்ற பாடசாலையாக கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரி திகழ்கின்றது.

அடுத்தபடியாக 17 மாணவிகள் 9ஏ சித்திகளுடன் கல்முனை மகுமூத் மகளிர் கல்லூரியும், அடுத்தபடியாக 9 மாணவர்கள் 9ஏ சித்திகளுடன் காரைதீவு இ.கி.சங்க பெண்கள் பாடசாலையும் முன்னணியில் உள்ளது. கல்முனை வலயத்திலே சாதாரண தர வகுப்புகள் உள்ள 33 பாடசாலைகளில் 96 வீதமான அதிகூடிய சித்தி வீதத்தை பெற்று முதல் இடத்தை கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரி திகழ்வது குறிப்பிடத்தக்கது.



# ஊடகவியலாளர்களின் பங்களிப்பு தொடர்பில் கருத்தரங்கு




**(எம்.என்.எம்.அப்ராஸ், நூருல் /ஹுதா உமர்)**

டயக்கோனியா சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தின் அனுசரணையில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் ஏற்பாட்டில் போதைப்பொருள் பயன்பாட்டை கட்டுப்படுத்துவதில் ஊடகங்களின் பங்களிப்பு மற்றும் குடும்பத்தில் பெண்கள், சிறுவர்கள் மத்தியில் தாக்கம் குறித்து அம்பாறை மாவட்டத்தில் உள்ள இளம் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக செயற்பாட்டளர்களுக்கான பயிற்சி பட்டறை கல்முனையில் சனிக்கிழமை (26) இடம்பெற்றது.

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் மாவட்ட நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர் யூ.எல்.ஹபீலா இணைப்பில் இடம்பெற்ற நிகழ்வில் வளவாளர்களாக சிரேஸ்ட ஊடகவியலாளர் எஸ்.எல்.அப்துல் அஸீஸ்,உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.பி.அப்துல் சுக்கூர் ஆகியோர் கலந்து கொண்டதுடன் மேலும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் அம்பாறை மாவட்ட கணக்காளர் ஆர்.அனுஸ்கா உட்பட இளம் ஊடகவியலார்கள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் எதிர்கால நிகழ்வுகளை கருத்திற் கொண்டு இளம் ஊடகவியலாளர்கள் வலையமைப்பு ஒன்றும் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு
களஞ்சியத்தின் விஸ்தீரணம் 1512 சதுர அடி. நீளம் 42 அடி, அகலம் 35 அடி, உயரம் 18 அடி. அலுவலக அறை 170 சதுர அடி. குளியல் அறை, மலசலகூடங்கள் 02, நீர் வசதி, மின்சார வசதி, போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில் அமைந்துள்ளது)
அமைவிடம்: திருகோணமலை வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு.
தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95



கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# தரம் ஐந்து மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சையும் கருத்தரங்கும்



**(ரக்ஸனா)**

மண்முனை தென் எருவில் பற்று, களுவாஞ்சிகுடி பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் இம்முறை தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் வினைத்திறனை விருத்தி செய்வதற்கான இலவச முன்னோடிப் பரீட்சையும் கருத்தரங்கும் பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரெத்தினம் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சனிக்கிழமை களுதாவளை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் கே.உதயகுமார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி. புவனேஸ்வரி ஜீவகுமார், கருத்திட்ட முகாமையாளர் திருமதி.சோ.தமிழ்வாணி, மாங்காடு சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ். ஆனந்தமோகன், எருவில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் பா.துரைராசசிங்கம், கல்லாறு சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.ரவிந்திரன், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திருமதி.எஸ். சந்திரசோதி, திருமதி.சந்திரவாணி மனோகரன், கிராம சேவை உத்தியோகத்தர்கள் எஸ்.சத்தியசீலன், எஸ்.ஞானசிறி மாணவர்கள், உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர். இந்நிகழ்வின் வளவாளர்களாக ச.ஜெயகரன் ஆசிரியர் அவர்களும், வ.செல்வராஜா ஆசிரியர் அவர்களும் கலந்து கொண்டதுடன், இம் மாணவர்களுக்கு உளவளத்தினை ஆற்றுப்படுத்துவதற்கான நிகழ்வினை பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.சத்தியவாணி மனோகரன் வழங்கியிருந்தார்.

இந்நிகழ்வு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் களுவாஞ்சிகுடி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




**கஞ்சிகுடியாறு மாவீரர் துயிலுமில்லத்தில் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் மாவீரர் தினத்தன்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதை படத்தில் காணலாம்**

# 86 வருட வரலாற்றில் முதல் தடவையாக நான்கு மாணவிகள் 9 ஏ சித்தி

**( காரைதீவு சகா)**

சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட 86 வருடகால வரலாற்றைக் கொண்ட நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் இம்முறை வெளியாகிய க.பொ.த. சா.தரப் பரீட்சையில் நான்கு மாணவிகள் 9 ஏ சித்திகளை பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்கள்.

அன்பழகன் பிரஜீத், ரவிச்சந்திரன் தனுஷா, பாலச்சுந்தரம் தனுக்ஷன் ,புஷ்பராஜா அபினேஷ் ஆகிய மாணவர்கள் 9ஏ சித்தி பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளதாக அதிபர் சீ.பாலசிங்கன் தெரிவித்தார். அதேவேளை பரராஜசிங்கம் நிலக்ஸா , தேவகுமார் பிரனிதா ஆகியோர் 8 ஏ பி சித்திகளை பெற்றுள்ளனர்.

அங்கு தோற்றிய 30 மாணவர்களுள் 22 மாணவர்கள் கணிதம் மற்றும் தமிழ் பாடங்களுடன் சித்தி பெற்றுள்ளார்கள்.மீதி 08 மாணவர்கள் கணிதம் அல்லது தமிழ் பாடங்களுடன் சித்தி பெற்றுள்ளார்கள்.

# ஒன்றாய் இணைந்து உயர்வாய் வாழ்வோம் எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற கலாசார நிகழ்ச்சி



**வி.சுகிர்தகுமார்**

சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் பல்வேறு செயற்றிட்டங்களை அக்கரைப்பற்றில் அமைந்துள்ள பாதிப்புற்ற பெண்கள் அரங்கம் முன்னெடுத்து வருகின்றது. கடந்த ஆறு மாதகாலமாக முன்னெடுக்கப்பட்டுவரும் இச்செயற்றிட்டத்தின் ஒரு முக்கிய நிகழ்வாக பல்வேறு சமூகங்களையும் ஒன்றினைத்தான கலாசார நிகழ்வு தம்பட்டை சுவாட் மண்டபத்தில் இன்று இடம்பெற்றது.

ஒன்றாய் இணைந்து உயர்வாய் வாழ்வோம் எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற கலாசார நிகழ்வுகளில் பல்வேறு கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன. பாதிப்புற்ற பெண்கள் அரங்க திட்ட இணைப்பாளர் நடராஜா சுமந்தி ,திட்ட பொறுப்பாளர் செல்வபதி கங்கேஸ்வரி ஆகியோரின் ஒருங்கிணைப்பில் அரங்கத்தின் தலைவியும் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளருமான செல்வி அனுசியா சேனாதிராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் சர்வமத குருமார்கள் பாதிப்புற்ற பெண்கள் அரங்க இணைப்பாளர் வாணி சைமன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சர்வமத குருமார்களின் ஆசியுடன் ஆரம்பமான நிகழ்வில் சமூக தலைவர்களின் உரையும் இடம்பெற்றது. அவர்களின் உரையில் சமூகங்கள் ஒற்றுமைப்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. இதன் பின்னராக திட்டத்தின் நோக்கம் மற்றும் மேற்கொண்ட நடவடிக்கைகள் அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவங்கள் திட்டத்தின் வெற்றி போன்ற பல்வேறு விடயங்களும் பாதிப்புற்ற பெண்கள் அரங்க தலைவி உள்ளிட்ட பொறுப்பாளர்களினால் விளக்கமளிக்கப்பட்டது.

தொடர்ந்து ஒற்றுமையை வெளிப்படுத்தும் நாடகம் கவிதை பாடல் என பல்வேறு கலை நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

இதேநேரம் பயிற்சி நெறியில் கலந்து கொண்டவர்களின் அனுபவ பகிர்வும் இடம்பெற்றது. பின்னர் கலைநிகழ்வுகளில் பங்கேற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. நிகழ்வுகளில் இறக்காமம், அட்டாளைச்சேனை , பொத்துவில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மதகுருமார் சமூக அமைப்பின் பிரதிநிதிகள் இளைஞர் யுவதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

